**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்.**

முன்னிலை : **திரு.சி.ஸ்ரீதர், பிஎஸ்ஸி., பி.எல்.,**
(JO Code : TN01286)
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருப்பூர்.

**2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 16 ம் நாள் திங்கள்கிழமை**

**I.A.No.27/2026**

**in**

**O.S.No.241/2016**

1.தீப்ஷிகா,
2.மைனர் தன்ஷிகா
மைனருக்கு கார்டியன் தாயார்
கவிதா என்கிற ராஜலட்சுமி – மனுதாரர்கள் /வாதிகள்

**– எதிர் –**

1.நாகராஜ்,
2.திருமூர்த்தி,
3.சிவகாமி,
4.மணியாத்தாள்,
5.சபரீஸ்,
6.சிவஞானமூர்த்தி,
7.சாந்தி.
8.கிளை மேலாளர், திவான் ஹவுஸிங்
பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிட்., ஈரோடு.
9.கோவிந்தம்மாள்
10.ரத்னா (எ) சிவரத்தினம்
11.பிரவீன்
12.நவீன்
13.விஜயலட்சுமி
14.வினோதன்
15.பிரமோத் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 09.03.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், 5, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பத்மநாபன் அவர்கள் ஆஜராகியும், மற்ற எதிர்மனுதாரர்கள் எதிருரையை தாக்கல் செய்யாத நிலையிலும், மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை இந்திமன்றப் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

## உத்தரவு

மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14–ன் கீழ் இந்த மனுவில் கண்டுள்ள மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களை கோப்பிற்கு ஏற்று உத்திரவு செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார்கள்.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம் பின்வருமாறு :–**

மனுதாரர் இவ்வழக்கில் 2ம் மனுதாரரின் கார்டியன் தாயார் என்றும், மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், கடந்த 02.03.2026 அன்று இந்நீதிமன்றத்தால் "Whether suit properties are separate properties of Senniappan?" என்ற கூடுதல் எழுவினா வனையப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்துக்கள் சென்னியப்பனுக்கும், அவரது மூதாதையர்களுக்கும் பிதுராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்டவை என்பதை நிரூபணம் செய்ய பாகபிரிவினை ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து குறியீடு செய்ய வேண்டியுள்ளதால் இந்த வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் விசாரணைக்கு எடுக்க உத்தரவிடக் கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**3. <u>6ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 5ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு :–</u>**

இந்த இருதரப்பு சாட்சிகள் விசாரணை முடிவுற்று இரு தரப்பிலும் வாதுரைத்த பின்னர் கூடுதல் எதிர் வினாக்கள் வனையப்பட்டுள்ளன. தாவா சொத்துக்களின் முன் உரிமை ஆவணங்கள் தற்போது தான் தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தவறாகும். ஏற்கனவே 07.05.1984ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் வாதிகள் தரப்பில் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டு உள்ளது. வழக்கிற்காக முன்னுக்கு பின் முரணாக மனுக்களை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். மனுவில் குறிப்பிட்ட காரணங்களுக்காக மீண்டும் வா.சா.1 ஐ திரும்ப முதல் விசாரணை செய்ய வேண்டும் என்பது தவறாகும். 1ம் மனுதாரர் ஏற்கனவே உரிய வயதினை அடைந்தவர் என்பதால் அவருக்காக அவரது காப்பாளர் சாட்சியம் அளிக்க வேண்டும் என்பது ஏற்புடையது அல்ல. மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்ட முகவரியில் வசிப்பதற்கு எவ்விதமான ஆவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை. 1ம் எதிர்மனுதாரரின் தூண்டுதலின் பேரில் உரிமை மூல ஆவணங்களை தவிர்த்து பொய்யான தாவாவினை தாக்கல் செய்துவிட்டு ஆண்டுகளாக வழக்கினை நடத்தாமல் மனுதாரர்கள் வழக்கில் புதிய மனுக்களை தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் கோரும் காரணத்திற்காக வா.சா.1 ஐ மீண்டும் விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதனால் இந்த மனுதாரர்களின் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்கள்.

**4.** இருதரப்பு வாதங்களும் மற்றும் வழக்கு ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

**5.** தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை :–

**6.** மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?

**<u>தீர்வு</u>**

**7.** **இந்த மனுதாரர்கள் மேற்படி அசல் வழக்கில் வாதிகள் ஆவார்கள்.** மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். **இந்த வழக்கில் இரு தரப்பிலும் சாட்சிகள்** விசாரணை முடிவுற்று இரு தரப்பிலும் வாதுரைகள் முடித்து தீர்ப்புக்காக வைக்கப்பட்ட நிலையில், ஒரு கூடுதல் எதிர் வினா வனையப்பட்டது. அதன்படி மேற்படி தாவா சொத்துக்கள் சென்னியப்பனுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்களா? என்று கூடுதல் எழுவினா வனையப்பட்டது. இந்த நிலையில், இந்த மனுதாரர் தரப்பில் மேற்படி எழுவினா குறித்து ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். அதன்படி, 07.05.1984 ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம், 10.10.1958 ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம், 13.11.1958 ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் ஆகியவற்றின் சான்றிட்ட நகல்களை தாக்கல் செய்து மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யவேண்டும் என்று கோருகிறார். ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில், ஏற்கனவே 07.05.1984 ம் தேதியிட்ட பாகபிரிவினை ஆவணம் குறியீடு செய்யப்பட்டுவிட்டதாகவும், ஆகவே வேண்டுமென்றே அவசியமற்ற ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதாக எதிர்வாதம் செய்யப்பட்டது.

**8.** இதுகுறித்து வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கும் பொழுது, மேற்படி 07.05.1984 ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 06.08.2005 ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுவிட்டன, மனுதாரர் தரப்பில் மேற்படி சொத்துக்கள் பூர்வீக சொத்துககள் என்பதை நிரூபிக்க மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஏற்கனவே மனுதாரர் தரப்பில் இதுகுறித்து சாட்சியங்கள்

அளிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் முதல் வாதமே தாவா சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் என்று குறிப்பிட்டு 07.05.1984 ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரப்படி பாத்தியப்பட்டது என்று வாதம் செய்யப்பட்டது. மேற்படி ஆவணமும் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டது. அதற்கு பிறகு, வாதியின் பாட்டனார் சென்னியப்பன் மற்றும் அவருடைய குடும்பத்தார்கள் 06.10.2005 ம் தேதியன்று பாகபிரிவினை செய்துக் கொண்டதாக கூறி அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டது. அவ்வாறான நிலையில், மீண்டும் எதற்காக இந்த ஆவணங்களை தாக்கல் செய்கிறார் என்பது குறித்து எவ்வித விளக்கங்களும் மனுதாரர் தரப்பில் அளிக்கப்படவில்லை. ஏற்கனவே இருதரப்பிற்கும் உரிய வாய்ப்புகள் வழங்கப்பட்டு இருதரப்பு சாட்சிகளும் முடிக்கப்பட்டு வழக்கு தீர்ப்பிற்காக இருக்கும் நிலையில், மனுதாரர் எவ்வித அவசியமுமின்றி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த நீதிமன்றம் அதனை இயந்திரதனமாக அனுமதிக்க முடியாது என்று கூறி தாக்கல் செய்த மனுவானது இடைக்கால மனு எண்கள். 25/2026 மற்றும் 26/2026 என்ற எண்ணில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக இந்த மனுவும் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

9. **முடிவாக,** இம்மனுவும் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. இந்த வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு செலவுத் தொகை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

**இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 16 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.**

SRIDHAR CHINNASAMY
Digitally signed by SRIDHAR CHINNASAMY
Date: 2026.03.16 16:21:39 +0530

**இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருப்பூர்.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை

SRIDHAR CHINNASAMY

Digitally signed by SRIDHAR CHINNASAMY
Date: 2026.03.16 16:21:45 +0530

**இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருப்பூர்.**

<u>Draft/Fair Orders</u>
I.A.No.26/2026 in
O.S.No.241/2016
Dated : 16.03.2026
II ADJ, Tiruppur.